BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## ப்ராம்ப்ட்டன் நகரமானது, கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சி முகமையை அமைத்து புதிய மைல் கல்லை அடைந்திருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 18, 2021) – ப்ராம்ப்ட்டன் நகர சபையால் நேற்று நியமனம் செய்யப்பட்ட, நகரத்தின் முதலாவது கலை, கலாச்சார மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சி அமைப்பின் ஸ்டாட்-அப் மற்றும் அதனை வளர்ச்சி பெறச்செய்வதற்காக அதன் தலைமைப் பொறுப்பை ஏற்க நுவி சித்து (Nuvi Sidhu) அவர்கள் பெயர் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த எட்டு ஆண்டுகளாக, நுவி சித்து அவர்கள், உள்ளூர் கலைஞர் சமூகத்தின் ஒரு சாம்பியனாக இருந்து வருகிறார்; வலுவான தகவல்தொடர்புகள் மற்றும் திட்டப்பணி மேலாண்மைத் திறன்களைப் பயன்படுத்தி, உறவுகளை வளர்ப்பதற்கும் ப்ராம்ப்ட்டன் நகரில் வளர்ந்து வரும் கலைஞர் சமூகத்திற்கான ஆதரவையும் பயன்படுத்தி இதைச் செய்கிறார். GTHA யில் பத்து வருட சமூக ஈடுபாட்டு அனுபவம் கொண்ட இவர், ஏராளமான கலைஞர்கள் மற்றும் இலாப நோக்கற்ற உள்ளூர் கலைஞர்களுடன் இணைந்து, கலைஞர்கள் செய்தவற்றை காட்சிப்பொருட்களாக்கி, அவற்றை நிர்வகித்தல் மற்றும் படைப்புத் துறைக்கு ஆதரவாக பயிற்சிப் பட்டறைகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்காக பணியாற்றியுள்ளார்.

ப்ராம்ப்ட்டன் நகரில் ஒரு வலுவான, படைப்பாற்றல் கொண்ட மற்றும் தொழில்முனைவதற்கான சுற்றுச்சூழலை ஆதரிப்பதற்காக, ஒரு சுயசார்பான, இலாப நோக்கற்ற ஸ்டார்ட்-அப்-ஐ நிறுவி அதன் உருவாக்கத்தையும் வழிநடத்துவதற்காக, மூத்த முன்னணி நிகழ்ச்சி தொகுப்பாளர் மைக்கேல் விக்கர்ஸ் அவர்களுடன் இணையவிருக்கிறார். மாறுபட்ட, ஆக்கபூர்வமான சமூகங்கள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் பலப்படுத்துவதற்கும் பொறுப்பு வகிக்கின்ற ஒரு யுக்திரீதியான தலைவர் எனும் புகழ் பெற்ற மைக்கேல் அவர்கள், பத்து வருட அனுபவத்தை தன்னுடன் கொண்டு வருகிறார். மிக சமீபத்தில், மைக்கேல் அவர்கள், டோரோன்ட்டோவை தளமாகக் கொண்ட அகின் (Akin) என்னும் கலை அமைப்பின் இணை இயக்குநராக இருந்தார்; அதில் இருந்தபடி, கட்டுபடியாகும் செலவில், பகிரந்துகொள்ளப்படக்கூடிய கனடாவின் மிகப்பெரிய ஸ்டுடியோ தளங்களை வழங்குவதற்கான யுக்திரீதியான திட்டமிடல் மற்றும் செயல்பாடுகளை அவர் முன்னெடுத்தார்.

இந்த புதிய அமைப்பானது நகரத்திற்கு மிக அருகில் இருந்தபடி செயல்படும்; மேலும் இந்த அமைப்பானது, நகரத்தின் யுக்திரீதியான தொலைநோக்குப் பார்வை மற்றும் கலாச்சார மாஸ்டர் திட்டத்தில் குரல் கொடுக்கப்பட்டுள்ளபடி, கலை, கலாச்சாரம் மற்றும் படைப்புத் தொழில்களுக்கான நகரத்தின் லட்சியம் எனப்படும் தொலைநோக்குப்பார்வையை வழங்குவதிலும் முக்கிய பங்காளியாக இருக்கும்.

இந்த ஏஜென்சியானது, கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சி நிறுவனமாக கற்பனைக் கண் கொண்டு பார்க்கப்படுகிறது; போற்றிக்காத்தல், வளர்த்தல், கொண்டாடுதல், மற்றும், சேவைகள் மற்றும் வளங்களை அளிப்பதன் வாயிலாக, பல துறைகளுக்காக அறிவுரை வழங்குதல் மூலம் இது செய்யப்படுகிறது.

படைக்கும் தன்மையதான, வெளிப்படையான மற்றும் இணைக்கப்பட்ட ஒரு புறநகர்ப் பகுதியாக மாற்றுவதற்கான ஒரு யுக்திரீதியான பாதையை நிலைநாட்டுவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகரம் அதன் கலாச்சார மாஸ்டர் திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தது.

**நுவி சித்து (Nuvi Sidhu) அவர்களைப்பற்றி**

நுவி சித்து (Nuvi Sidhu) அவர்கள் ஒரு திட்ட மேலாண்மை ஆலோசகர் ஆவார், மேலும் உள்ளூர் கலைஞர்கள், படைப்பாளிகள் மற்றும் /அல்லது இலாப நோக்கற்றவர்களுக்கு திட்ட மேலாண்மை சேவைகளை வழங்குவதற்காக, கடந்த 5 ஆண்டுகளாக நுவ்கோ இன்க் (NuvCo Inc) நிறுவனத்தை நடத்தி வருகிறார். தற்போது நுவி அவர்கள் பாயிண்ட் பிளாங்க் கிரியேட்டிவ் (Point Blank Creative) நிறுவனத்தில் மூத்த தயாரிப்பாளராக உள்ளார், இந்த நிறுவனமானது, முன்னதாக டிஜிட்டல் பிரச்சாரங்கள், மற்றும் படைக்கும் தன்மையதான திட்டங்களை மையமாகக் கொண்ட ஒரு விளம்பர நிறுவனமாக இருந்தது; நுவி அவர்கள், ரூப்பி காவ்ர் இன்க் Rupi Kaur Inc), சோச் (SOCH), தி எலிமென்ட் மற்றும் நொய்ஸ் (Noyz) உள்ளிட்ட ப்ராம்ப்ட்டன் கலைஞர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான திட்ட மேலாளராக பணியாற்றியுள்ளார். நுவி அவர்கள் முன்னதாக, சென்ட்டென்னியல் கல்லூரியில் மற்றும் ஒன்ட்டேரியோ உள்கட்டமைப்பு (Infrastructure Ontario) அமைப்பில் மூத்த திட்டப்பணி மேலாண்மை ஆலோசகராகவும் பல்வேறு பொதுத்துறை பதவிகளையும் வகித்துள்ளார். ப்ராம்ப்ட்டனின் முதலாவது கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சி முகமைக்கு வருவதற்கு முன்பாக, 9 ஆண்டுக்கால திட்டப்பணி மேலாண்மை அனுபவம், 4 ஆண்டுக்கால அரசு உறவுகள் அனுபவம் மற்றும் பீல் பிராந்தியத்திற்குள் கலை மற்றும் கலாச்சாரத்தில் 10+ ஆண்டுகள் சமூக திட்டங்களை ஏற்பாடு செய்த அனுபவம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறார். நுவி அவர்கள் யார்க் பல்கலைக்கழகத்தில் (York University) இளங்கலை பட்டமும், ஷெரிடன் கல்லூரியில் (Sheridan College) திட்டப்பணி மேலாண்மைக்கான சான்றிதழும் பெற்றுள்ளார். திட்டப்பணி மேலாண்மைக்கல்வி நிறுவனத்தால், அவர் ஒரு திட்டப்பணி மேலாண்மை நிபுணராக (PMP) அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்

கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஆரம்பக் கட்டத்தில், 3 ஆண்டு காலப்பகுதியில், லாப நோக்கற்ற தன்மை என்னும் நிலைக்கு வெற்றிகரமாக கொண்டுவருவதற்காக, ஒரு தன்னார்வப் பாத்திரத்தை நுவி வகிப்பார். தலைவராக நியமனம் செய்யப்படுவதற்காக ஜனவரி 2020 இல், நகரசபைக் கவுன்சிலானது தகுதி அறிவதற்கான விரிவான ஒரு பணி செய்த பின்னரே இந்த நியமனத்தைச் செய்ய ஒப்புதல் அளித்தது.

**மைக்கேல் விக்கர்ஸ் ( Michael Vickers) பற்றி**

இவர் ஒன்ட்டேரியோ ஆர்ட்ஸ் கவுன்சில், டோரோன்ட்டோ ஆர்ட்ஸ் கவுன்சில் மற்றும் கனடிய கலைகளுக்கான கவுன்சில் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட விருது பெற்ற கலைஞர் ஆவார்; கடந்த 9 ஆண்டுகளாக, மைக்கேல் அவர்கள், படைக்கும் தன்மையதான ஸ்டுடியோ தளத்தையும், கலை அடிப்படையிலான நிகழ்ச்சிகளையும் வழங்குகின்ற GTHA கலை அமைப்பான அகின் கலெக்டிவ் (Akin Collective) நிறுவனத்தின் இணை இயக்குநராக பணியாற்றியுள்ளார். இந்த ஸ்டுடியோக்கள், அனைத்து வகையான மக்களின் படைக்கும் தன்மையதான முயற்சிகள் மற்றும் தொழில் முனைவோர்களின் முயற்சிகளில் ஒரு எழுச்சியூட்டும் சூழ்நிலையை தரவல்ல ஒரு பணிச்சூழலை வழங்குகின்றன. அகின் (Akin) அமைப்பானது, மாதாந்திர கலை விமர்சனங்கள், பயிற்சிப் பட்டறைகள், திறந்தநிலை ஸ்டுடியோ நிகழ்ச்சிகள், கேலரி (படக்காட்சிகளின்) சுற்றுப்பயணங்கள், கண்காட்சிகள் மற்றும் பல்வேறு கலைத் திட்டங்கள் மூலம் சமூகத்தை வளர்க்கின்றது. இதற்கு முன்னதாக, மைக்கேல் அவர்கள், டோரோன்ட்டோ மற்றும் நியூயார்க் நகரங்களின் பல்வேறு காட்சியகங்களில் பங்கு வகித்தார். ஹம்பர் கல்லூரியில் தற்காலக் கலையை மைக்கேல் கற்பித்தார், ஹம்பர் கல்லூரி மற்றும் OCADபல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பணி செய்தார்; Banff Centre for Arts and Creativity- Leaders' Lab, AZ West- Andrea Zittlel Wagon Station Encampment in California, மற்றும் டோரோன்ட்டோவில் உள்ள VSVSVS ஸ்டுடியோ ரெஸிடென்ஸி ஆகியவற்றில் பங்கு வகித்திருக்கிறார். மைக்கேல் அவர்கல், ஒட்டாவா பல்கலைக்கழகத்தில் விஷுவல் ஆர்ட்ஸ்-ஐ முதன்மைப்பாடமாக எடுத்து இளங்கலை பட்டமும் மற்றும் டோரோன்ட்டோ பல்கலைக்கழகத்தில் தற்கால மற்றும் நவீன கலை வரலாறு ஆகியபாடங்களில் முதுகலைப் பட்டமும் பெற்றவர் ஆவார்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"பொருளாதாரத்திற்கான ஒரு உந்துகோல் என கலைகளை வலுப்படுத்துவதிலும், நகரத்தின் தற்போதைய கலாச்சார சூழலை செழிப்பான கலைக் காட்சியாக மாற்றுவதிலும் இந்த முகமையானது, ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருக்கும் - கலாச்சார மற்றும் சமூக முன்னேற்றத்தை உண்டாக்கி, முதலீட்டை ஈர்த்து மற்றும் ஆக்கபூர்வமான தயாரிப்புகளை உற்பத்தி செய்யும்விதமாக, பங்கேற்பது மற்றும் நுகர்வதற்கான வாய்ப்புகளுடன் முழுமையானதொரு பங்காற்றலாக இருக்கும். முதலீடுகளை ஈர்த்து ப்ராம்ப்ட்டனின் தனி அடையாளத்தையும் உருவாக்கும்."

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நகரத்தின் கலாச்சார மாஸ்டர் திட்டத்திற்கு ஏற்ப, கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சியில் மட்டுமே கவனம் செலுத்தும் ஒரு முகமையைக் கொண்டிருப்பது என்பது, ப்ராம்ப்ட்டன் நகரில் ஒரு வலுவான, படைப்புரீதியான, மற்றும் தொழில் முனைவோர் சூழல்ரீதியிலான கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஒரு முக்கியமான இணைப்பாகும். ப்ராம்ப்ட்டன் நகரின் கலை சமூகமானது, ப்ராம்ப்ட்டன் நகருக்கான பொருளாதார மீட்பிற்கு ஒரு முக்கிய பங்கு வகிக்கும்; மேலும்

இந்த புதிய மைல்கல் ஆனது கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சிக்கான முகமையானது, அந்த முக்கியமான பணியை முன்னெடுக்க உதவும். ”

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைமைப் பொறுப்பு, சமுதாய சேவைகள் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஒரு ஆலோசனைக் குழுவை மேற்பார்வையிட்டு ஆளுமையும் செய்து, தலைமை தாங்கவும் செய்கின்ற வகையிலான ஒரு தலைவரை நியமிப்பது என்பது, ப்ராம்ப்ட்டன் நகரின் முதலாவது கலை, கலாச்சார மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சி முகமையின் துவக்கத்திற்கும் மற்றும் வளர்ச்சிக்குமான ஒரு மைல்கல்லாகும். இந்த பாத்திரமானது, மூத்த தலைவர் ஒருவருடன் சேர்ந்து, ப்ராம்ப்ட்டன் நகரில், கலைகளின் முக்கியத்துவம் மற்றும் அதற்கான நிலையை ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். ”

*- ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர் வார்டுகள் 9 & 10; தலைமைப் பொறுப்பு, பெருநிறுவனசேவைகள் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரின் கலை, கலாச்சார மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் ஆகியவை நமது நகரத்தின் துடிப்பான பலகலவை அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாகும். முகமையின் நிபுணத்துவம் கொண்ட ஆலோசனைக் குழுவுடனான நெருங்கிய ஒத்துழைப்பின் மூலமாக, எங்கள் குழுவானது, ப்ராம்ப்ட்டன் நகரில் வளர்ந்து வரும் கலை மற்றும் கலாச்சார கண்ணோட்டத்தை வளர்ப்பதில் உறுதியாக உள்ளது; இது எங்கள் சமூகத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு பங்களிக்கிறது. ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

”கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும்தன்மையதான தொழில் வளர்ச்சி முகமைக்கான, ப்ராம்ப்ட்டன் நகரின் தலைமையை ஏற்று அதனைத் தொடங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்; ப்ராம்ப்ட்டன் நகரின் பன்முகத்தன்மைக்கு பங்களிக்கின்ற பல திறமையான கலைஞர்கள் மற்றும் கலை அமைப்புகளை அணுகி பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன். ப்ராம்ப்ட்டன் நகர கலைஞர்களுடன் முன்னணி வகித்தபடி, முகமைக்கான தொலைநோக்குப் பார்வை உயிர்ப்பிக்கப்படுவதைக் காண, அவர்களுடன் கூட்டாக நாங்கள் பணியாற்ற முடியும் என்று நம்புகிறேன். மைக்கேல் விக்கர்ஸ் உடன் சேர்ந்து பணியாற்றுவதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன்; திட்டப்பணிக்கான மூத்த தலைவர் என்ற அவரது பாத்திரத்திற்கு ஏற்ப, இந்த புதிய மற்றும் அற்புதமான அமைப்பைத் தொடங்குவதற்கான தலைமையை அவர் ஏற்பார் மற்றும் யுக்திரீதியான திட்டமிடல் நிபுணத்துவத்தையும் வழங்குவார். "

*- நுவி சித்து, தலைமைப் பொறுப்பு, ப்ராம்ப்ட்டன் நகரின் கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும் தன்மையதான தொழில் வளர்ச்சி முகமை*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter*, *Facebook*,** மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்..

**ஊடகத் தொடர்புகள்**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca